www.Padasalai.Net

அனுப்புநர்
பா.பொன்னையா, இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,
பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,
சென்னை– 15.

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
அனைத்து மாவட்டங்கள்
(சென்னை நீங்கலாக)

ந.க.எண்.057/2024/ப.ரா–3.3, நாள்: 06.08.2024

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிராம சபைக் கூட்டம் – **15.08.2024 சுதந்திர தினத்தன்று** கிராம சபைக் கூட்டம் நடத்துதல் – கூட்டப் பொருள்கள் அனுப்பி வைத்தல் – தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண்.245, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 19.11.1998.
2. அரசாணை (நிலை) எண்.130, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி4) துறை, நாள் 25.9.2006.
3. அரசாணை (நிலை) எண்.65, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2) துறை, நாள் 24.5.2022.
4. முதன்மை தலைமை வன பாதுகாவலர் மற்றும் உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம் அவர்களின் கடித எ.ண்.TNBB/619/2019/B2, நாள்.18.07.2024.
5. இவ்வியக்கக அ.சா.கு.எண்.49691/2024/ம.கா.தே.ஊ.வே.உ.தி–1.2, நாள்.29.07.2024.
6. இவ்வியக்கக அ.சா.கு.எண். 16009 / 2024 / தூ.பா.இ(ஊ)–2, நாள்.31.07.2024.
7. இவ்வியக்கக அ.சா.கு.எண். 3654 / 2021 / ஜெஜெஎம்–2, நாள்.01.08.2024.

--------

பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி, 15.08.2024 **சுதந்திர தினத்தன்று** அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். பார்வை 2–ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு குறைவெண் வரம்பின்படி உறுப்பினர்களின் வருகை இருப்பதை உறுதி செய்து கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். கிராம சபைக் கூட்டத்தினை ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையை பின்பற்றி **15.08.2024 சுதந்திர தினத்தன்று காலை 11.00 மணி** அளவில் நடத்திட வேண்டும்.

கிராம சபை நடத்துவது குறித்து பதிவு செய்திடும் பொருட்டு கைபேசி செயலி (Android Application) தயார் செய்யப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி

www.Padasalai.Net

நிகழ்நேர கிராம சபை கூட்ட நிகழ்வுகளை உள்ளீடு செய்யக்கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கிராம சபைக் கூட்டங்கள் மதச்சார்புள்ள எந்தவொரு வளாகத்திலும் நடந்திடக் கூடாது. கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறும் இடத்தை முன்கூட்டியே ஊரகப் பொதுமக்களுக்கு தெரியப்படுத்திட வேண்டும்.

மேலும், 15.08.2024 அன்று நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெற உரிய நடவடிக்கை எடுத்திடவும் மற்றும் கூட்டம் தொடர்பான அறிக்கையினை இவ்வியக்ககத்திற்கு 18.08.2024-க்குள் அனுப்பி வைக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: கிராம சபைக் கூட்டப் பொருள்கள் (12).

ஒம்/- பா.பொன்னையா,
இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

இயக்குநருக்காக

நகல்:-

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
   ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
   தலைமைச் செயலகம், சென்னை- 9.
2. மேலாண்மை இயக்குநர்,
   தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
   சென்னை-34.
3. கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர்,
   மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
   அனைத்து மாவட்டங்கள்.
4. திட்ட இயக்குநர், மகளிர் திட்டம்,
   அனைத்து மாவட்டங்கள்.
5. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
   அனைத்து மாவட்டங்கள்.
   **(தக்க நடவடிக்கைக்காக).**

www.Padasalai.Net

**<u>சுதந்திர தினத்தன்று (15.08.2024) நடைபெறும் கிராமசபை கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பொருள்கள் விவரம்</u>**

**<u>பொருள் 1: கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல்.</u>**

கிராம ஊராட்சிகளில், 01.04.2024 முதல் 31.07.2024 முடியவுள்ள காலத்தில் கிராம ஊராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொண்ட **செலவின அறிக்கை** படிவம் 30 மற்றும் இதர விவரங்களை கிராம சபையில் படித்து காண்பித்து ஒப்புதல் பெறுதல்.

**2024-25 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்:**

| வ.எண். | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| | | | | |

**<u>பொருள் 2: கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை</u>**

கிராம ஊராட்சியின் கடந்த ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையினை கிராம சபையின் பார்வைக்கு வைத்து ஒப்புதல் பெறுதல்.

**<u>பொருள் 3: தூய்மையான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்வது குறித்து விவாதித்தல்</u>**

- தூய்மையான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல், மேல் நிலை நீர் தேக்கத் தொட்டி, தரை மட்ட நீர் தேக்கத் தொட்டி மாதம் இருமுறை சுத்தம் செய்தல். (பிரதி மாதம் 5ம் தேதி மற்றும் 20ம் தேதி)
- தகுந்த அளவு குளோரின் கலந்து குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல்.

**<u>பொருள் 4: இணையவழி வரி செலுத்தும் சேவை</u>**

- கிராம ஊராட்சிகளில் இணைய வழியில் ஊராட்சிக்கான வரி மற்றும் கட்டணங்கள் செலுத்த <u>WWW.VPTAX.TNRD.TN.GOV.IN</u> என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொது மக்கள் தங்களின் வீட்டு வரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் இதர வரியில்லா கட்டணங்களை இணைய வழியில் எளிதாக செலுத்த இயலும்.
- ஊராட்சிகளில் வசிக்கும் மக்கள் தங்களின் வரியினை செலுத்துவதற்கு தங்களின் கேட்பு எண் அல்லது கைப்பேசி எண்ணை கொண்டு எளிதாக கேட்பு விவரங்களை பெற இயலும்.

www.Padasalai.Net

- இந்த தளத்தில் பொதுமக்கள் தங்களின் வங்கி அட்டைகள் (CREDIT CARD, DEBIT CARD), UPI, இணைய வங்கி சேவை (INTERNET BANKING) ஆகியவை மூலம் ஊராட்சிக்கான வரி மற்றும் கட்டணங்களை எளிதாக செலுத்தலாம்.
- மேலும், ஊராட்சி அலுவலகத்தில் உள்ள கணினி சேவையின் மூலம் அல்லது ஒவ்வொரு ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ள கையடக்க கருவி (PoS Device) மூலம் ஊராட்சிக்கான வரி மற்றும் கட்டணங்களை செலுத்தலாம் என்கிற விவரத்தை கிராம சபையின் முன் வைத்தல்.

**பொருள் 5 : இணைய வழி மனைப்பிரிவு மற்றும் கட்டட அனுமதி வழங்குதல்**

- ஊரகப் பகுதிகளில் உள்ள மக்கள் தங்களின் மனைப்பிரிவு / கட்டடங்களுக்கு எளிதாக இணைய வழியில் அனுமதி பெற தமிழ்நாடு அரசு www.onlineppa.tn.gov.in என்ற ஒற்றைச் சாளர தளத்தை உருவாக்கியுள்ளது.
- இதன்மூலம் ஊரக மக்கள் தங்களின் மனைப்பிரிவு விண்ணப்பங்கள், குடியிருப்பு கட்டட விண்ணப்பங்கள், வணிக கட்டடங்களுக்கான வரைபட அனுமதி, தொழிற்சாலைகளுக்கான கட்டட வரைபட அனுமதி ஆகியவற்றையும் எளிதாக விண்ணப்பித்து நகர் ஊரமைப்புத் துறை மற்றும் கிராம ஊராட்சியின் அனுமதியை எளிதாக பெற முடியும். மேலும், இதற்கான கட்டணங்கள் அனைத்தும் இணைய வழியிலேயே செலுத்த முடியும் என்கிற விவரத்தை கிராம சபையின் முன் வைத்தல்.

**பொருள் 6 : சுய சான்றின் அடிப்படையில் குடியிருப்பு கட்டடங்களுக்கு உடனடி பதிவின் மூலம் அனுமதி வழங்குதல் (SELF CERTIFICATION)**

ஊரகப் பகுதிகளில் ஒற்றைச்சாளர முறையில் சுய சான்றை அடிப்படையாகக் கொண்டு கட்டட அனுமதி பெறும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட நடைமுறை தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 2500 சதுர அடிக்கு குறைவான மனைப்பரப்பில் 3,500 சதுர அடி வரை தரைத்தளம் அல்லது தரை மற்றும் முதல் தளம் கொண்ட 2 குடியிருப்பு வரை உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஒற்றைச்சாளர முறையில் சுய சான்றின் அடிப்படையில் உடனடி அனுமதி வழங்கப்படும்.

**இந்த சுயசான்று முறையில் பின்வரும் மேம்பாடுகள் உள்ளன :**

1) குடியிருப்பு கட்டிடத் திட்ட அனுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பம் மற்றும் நடைமுறையை எளிமைப்படுத்துதல்.
2) கட்டிடத் திட்ட அனுமதியைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்தல்.

www.Padasalai.Net

3) கட்டிடத் திட்ட அனுமதிக்கான கட்டணத்தைச் செலுத்துவதை எளிதாக்குதல்.
4) ஒப்புதலுக்குப் பிந்தைய ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.
5) கட்டிடத் திட்ட அனுமதியைப் பெறுவதில் இடைத்தரகர்களைத் தவிர்த்தல் மற்றும் மக்கள் நேரடியாக விண்ணப்பித்து சுயசான்று மூலம் அனுமதி பெறுதல்.

**பின்வரும் 5 முக்கிய ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் சுயசான்று கட்டிட அனுமதி பெறுவதற்கான செயல்முறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது :**

1) பதிவு செய்யப்பட்ட கட்டிட வல்லுநரால் கையொப்பமிடப்பட்ட திட்ட வரைபடம் (PDF வடிவத்தில்).
2) விண்ணப்பதாரர் பெயரில் பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரம்
3) விண்ணப்பதாரரின் பெயரில் பட்டா.
4) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ஆவணம்.
5) தளபுகைப்படம்.

சுய சான்று கட்டிட அனுமதி வழங்கிடும் பொருட்டு ஊராட்சிகளை வகைப்பாடு செய்து பின்வருமாறு கட்டணம் நிர்ணயம் செய்யப்படுள்ளது.

**<u>சுய சான்று முறையில் ஒற்றை சாளர தளத்தில் – கட்டட வரைபட அனுமதி கட்டண விவரம்</u>**

| வகைப்பாடு | வகைப்பாடு விவரம் | ஒரு சதுர அடிக்கான கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| அ | நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகள் – சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும எல்லைக்குட்பட்டவை | 27 |
| ஆ | நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகள் – சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும ஊராட்சிகள் அல்லாதவை | 25 |
| இ | சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும எல்லைக்குட்பட்ட இதர ஊராட்சிகள் | 22 |
| ஈ | மேற்குறிப்பிட்டுள்ள வகைப்பாட்டுக்குள் இல்லாத இதர ஊராட்சிகள் | 15 |

(*அந்தந்த ஊராட்சிக்கான கட்டணத்தை மட்டும் கிராம சபையில் குறிப்பிடவும். மேற்படி கட்டணமானது கட்டட தொழிலாளர் நலநிதி நீங்கலாகும்.)

www.Padasalai.Net

மேற்படி சுய சான்றின் அடிப்படையில் கட்டட அனுமதி பெறும் வழிவகை கிராம சபைக்கு முன் வைத்தல்.

**<u>பொருள் 7: தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சி கணக்கு (TNPASS)</u>**

தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில் 11 வகையான வங்கிக் கணக்குகள் PFMS மூலம் இயங்கி வந்தன. தமிழ்நாடு எளிமைப்படுத்தப்பட்ட ஊராட்சி கணக்கு (TNPASS) கிராம ஊராட்சிகளின் நிதி பரிவர்த்தனைகளை எளிமைப்படுத்திட அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் கிராம ஊராட்சிகளின் கணக்குகளை கையாளுதல் ஒரே செயலியின் மூலம் எளிமைப்படுத்தப்பட்டுள்ளதால் கிராம ஊராட்சிகளில் விரைவான பரிவர்த்தனைகள் மற்றும் சேவைகள் வழங்க உதவுகின்றது என்கிற விவரம் கிராம சபைக்கு முன் வைத்தல்.

**<u>பொருள் 8 : தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம் – உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழு</u>**

- உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களின் (BMC) செயல்பாட்டை உறுதி செய்தல்.
- மூன்று மாதங்களுக்கு ஒருமுறை BMC கூட்டத்தை தவறாமல் நடத்தி, அதில் உயிரிப்பல்வகைமை பாதுகாத்தல் மற்றும் அதன் நிலையான பயன்பாடு குறித்து விவாதங்கள் மேற்கொண்டு கூட்ட நடவடிக்கை குறிப்புகளை தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்திற்கு நோடல் அலுவலர் மூலம் அனுப்பி வைத்தல்.
- உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களின் (BMC) எல்லைக்குள் உயிர் வளங்களின் பயன்பாடு மற்றும் சேகரம் செய்யப்படும் விவரங்களை பதிவு செய்தல்.
- உயிரிப்பல்வகைமை சட்டம் 2002, பிரிவு 41(3) இன் படி, உயிர் வளங்களை வெளியாட்கள் வணிக நோக்கத்திற்காக சேகரம் செய்யும் பட்சத்தில் அதற்கு உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்கள் ஒரு கட்டணம் வசூல் செய்தல்.
- மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் (BMC) – வனத்துறை – மாவட்ட வன அலுவலர்

  ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

www.Padasalai.Net

**பொருள் 9: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

பொருள் – 9 அ

2024–25 ஆம் ஆண்டுக்கான, தொழிலாளர் வரவு–செலவு திட்டத்தினை ஜீலை 31ம் தேதி வரையிலான முன்னேற்ற அறிக்கையுடன் ஒப்பிட்டு விவாதித்தல்.

| வ. எண் | 2024–25 (31.07.2024 வரை) | |
|---|---|---|
| | உருவாக்கப்பட்ட மனித சக்தி நாட்கள் | மேற்கொள்ளப்பட்ட செலவினம் |
| (1) | (2) | (3) |
| | | |

பொருள் – 9 ஆ

2024–25 ஆம் ஆண்டின் பணித்தொகுப்பில் (Shelf of Project) கூடுதலாக சேர்க்க வேண்டிய பணிகளின் விவரம் கிராம சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தல்.

பொருள் – 9 இ

2024–25 ஆம் ஆண்டில் தனிநபர் சொத்து உருவாக்கும் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய பயனாளிகளின் பட்டியல் கிராம சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தல்.

**பொருள் 10 : தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)**

தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம், வழிகாட்டு நெறிமுறைகளின் படி தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற ஊராட்சிகள் "ODF Plus – Aspiring" என அறிவிக்கப்பட்டு, பின்னர் அவை ODF Plus என்ற நிலையான திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைப்பதோடு, கூடுதல் நிலையான திட அல்லது திரவக்கழிவு மேலாண்மை வசதிகளைக் கொண்ட ஊராட்சிகள் "ODF Plus – Aspiring" என்ற நிலையை அடைந்தன. அதன் அடுத்த கட்டமாக திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை வசதிகளைக் கொண்ட கிராம ஊராட்சிகளில் தற்போது கிராம ஊராட்சிகள் "ODF Plus – Aspiring" நிலையிலிருந்து, "ODF Plus –Rising" என்ற நிலையையும், "ODF Plus –Model Village" என்ற நிலையையும் அடையப்பெற்ற பின்னர், அனைத்து இலக்குகளையும் எய்திய கிராம ஊராட்சிகளை கிராம

www.Padasalai.Net

சபையில் தீர்மானம் இயற்றிய அவ்வூராட்சிகளை மேற்குறிப்பிட்டவாறு வகைப்படுத்தி அறிவிப்பு செய்திடல் வேண்டும்.

எனவே, கிராம ஊராட்சிகளில் தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம் வழிகாட்டு நெறிமுறைகளின் படி திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மையில் இலக்குகள் எய்தி "ODF Plus –Aspiring" நிலையில் உள்ள ஊராட்சிகளின் தகுதிகளுக்கேற்றபடி கிராம ஊராட்சிகளை ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று கிராம சபையில் தீர்மானப் பொருள் கீழ்க்கண்டவாறு சேர்க்க தெரிவிக்கப்படுகிறது.

**பொருள் – 10 அ – ODF Plus Rising Village**

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையில் இருந்த ----------- ஊராட்சி, திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை வசதிகளைக் கொண்ட _______ ஊராட்சி தூய்மையில் உயரும் ஊராட்சி (ODF Plus – Rising) என அறிவிக்கப்படுகிறது.

**பொருள் – 10 ஆ – ODF Plus Model Village**

திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மையில் தன்னிறைவு பெற்ற-------- கிராம ஊராட்சி, பார்வைக்கு தூய்மையாக விளங்குவதால் __________ "முன்மாதிரி ஊராட்சி (ODF Plus – Model Village)"என அறிவிக்கப்படுகிறது.

**பொருள் 11 : ஜல் ஜீவன் இயக்கம்**

- ஜல் ஜீவன் இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்படும் கிராம குடிநீர் உட்கட்டமைப்பு பணிகளுக்கு 10% **சமூக பங்களிப்பினை** வழங்குவதன் மூலம் கிராம ஊராட்சியின் குடிநீர் விநியோக பணிகளில் அனைவரும் பங்கேற்பதை உறுதி செய்தல்.
- கிராம ஊராட்சியில் செயல்பாட்டில் இருக்கும் மற்றும் புதிதாக செயல்படுத்தப்படும் கூட்டுக் குடிநீர் திட்டங்களின் செயல்பாடு மற்றும் திட்டத்தின் முழுமையான விவரத்தினை கிராம சபையில் விரிவாக எடுத்துரைத்து இதுதொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- பயிற்சி பெற்றகிராம மகளிர் சுய உதவி குழுப் பெண்களை கொண்டு, ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்டுள்ள கள ஆய்வு கருவிகளை (Field Test Kit) பயன்படுத்தி 15 நாட்களுக்கு ஒருமுறை குடிநீரின் தரத்தினை ஆய்வு செய்து உரிய பதிவேட்டில் பதிவு செய்வதை உறுதி செய்தல்.
- கிராம ஊராட்சியினை "வீடுதோறும் குடிநீர் வழங்கப்பட்ட ஊராட்சி" என்ற நிலைக்கு மேம்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து பணிகளும்

www.Padasalai.Net

கட்டாயம் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தில் (VPDP) இடம்பெறுவதை உறுதி செய்தல்.

- கிராம ஊராட்சியில் உள்ள பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், அரசுபொதுகட்டிடங்கள் அனைத்திலும் குழாய் இணைப்புகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்தல்.
- குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு அரசால் அரசாணை எண். 260, ஊ.வ (ம) ஊ.து, நாள்: 09.12.1998-ன்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாதாந்திர கட்டணம் ரூ.30-க்கு குறையாமல் குடிநீர் கட்டணம் செலுத்தப்படுவதை உறுதி செய்தல்.
- அனைத்து மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளிலும் "குளோரின் கலப்பான்" (Chlorinator) கருவிகளை பொருத்தி குடிநீரில் குளோரின் (Chlorine) கலப்பதை உறுதி செய்தல்.
- ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் 100 % குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்ட ஊராட்சியினை "வீடுதோறும் குடிநீர் வழங்கப்பட்ட ஊராட்சி" என கிராம சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கிராம ஊராட்சித் தலைவரால் சான்றிதழ் வழங்குதல்.
- ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்ட பின்னர் வீட்டின் குடும்பத் தலைவரின் ஆதார் எண்ணினை பெற்று ஜல் ஜீவன் இயக்க இணையத்தளத்தில் (IMIS-Portal) பதிவேற்றம் செய்வதை உறுதிசெய்தல்.

**பொருள் 12: இதர பொருட்கள்**

கிராம சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் ஏதேனும் பிற பொருட்கள் இருப்பின் கிராம சபையின் ஒப்புதலுக்கு கொண்டு வரப்படலாம்.

ஒம்/- பா.பொன்னையா,
இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

இயக்குநருக்காக

6.8.2024